# இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயம், சங்ககிரி
# (சார்பு நீதிமன்றம், சங்ககிரி)

முன்னிலை : திரு. N. பன்னீர்செல்வம், B.A., B.L.,
இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயர்/சார்பு நீதிபதி, சங்ககிரி.

திருவள்ளுவராண்டு 2056, விசுவாவசு வருடம், மாசித்திங்கள் 22 ம் நாள் வெள்ளிக்கிழமை
2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 06 ம் நாள் வெள்ளிக்கிழமை

இ.வி.கோ.ம.எண். 674/2008
CNR No: TNSA07-000021-2008

1. இந்திராணி, க/பெ. ஆறுமுகம், வயது 39,
2. ஆறுமுகம், த/பெ. ராக்கியண்ண நாடார், வயது 44,
   மனுதாரர்களின் வசிப்பிடம் கதவு எண்.8/9, மேடுகாடு, சித்தாளந்தூர்,
   திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம்.
   தற்போதைய வசிப்பிடம் திருநகர், சங்ககிரி வட்டம்,
   சேலம் மாவட்டம்.

..மனுதாரர்கள்

/எதிராக/

1. மோகன் (*இறப்பு)
2. நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
   D.O.I, LRN பில்டிங், சாரதா காலேஜ் ரோடு, சேலம்.
3. மணி, த/பெ. அருணாசலம்,
   வசிப்பிடம் கதவு எண்.14/80, மெயின் ரோடு, நஞ்சுண்டபுரம்,
   காளப்பநாயக்கன்பட்டி அஞ்சல், நாமக்கல்.
4. நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
   92, கிழக்கு அஞ்சல் அறை முதல் தளம், GN செட்டி ரோடு,
   T. நகர், சென்னை.
5. விஜயகுமார் (*), த/பெ. லேட். மோகன், கதவு எண்.99,
   சட்டையாம்புதூர், சூரியம்பாளையம் அஞ்சல்,
   திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம்.

..எதிர்மனுதாரர்கள்

(*) மனு நிலுவையில் இருக்கும்போது 1 ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டதால், அவரது வாரிசுதாரர் அசல் மனுவில் 5 ம் எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டுள்ளார். அது குறித்த திருத்தம் இ.ம.எண்.1264/2015, நாள்: 25.08.2015 ன்படி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்னர் 12.02.2026 தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் C. பரணீதரன், K. சித்தேஸ்வரன் ஆகியோர்கள் முன்னிலையாகியும், 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. M. மதி அவர்கள் முன்னிலையாகியும், 4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P. பன்னீர்செல்வம் அவர்கள் முன்னிலையாகியும், 1,3,5 எதிர்மனுதாரர்களை தீர்ப்பாயத்தில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினரர்களாக பதிவு செய்தும், மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், மேற்படி இரு தரப்பையும் கேட்டும்,

இதுநாள் வரையில் இந்த தீர்ப்பாயத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இம்மனுவில் இந்த தீர்ப்பாயம் பிறப்பிக்கும்,

<u>உத்தரவு:-</u>

1) இம்மனு 1,2 மனுதாரர்களின் மகனான சுரேஷ் என்பவர் வாகன விபத்தில் இறந்துவிட்டதற்கு இழப்பீடாக ரூ.10,00,000/-ம், பின்வட்டி மற்றும் செலவுத்தொகை கோரி மோ.வா.சட்டம் பிரிவு 166 தமிழ்நாடு மோட்டார் வாகன விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாய விதி 3 ன் கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுவின் சுருக்கம் :</u>

1,2 மனுதாரர்களின் மகனான சுரேஷ் என்பவர் கடந்த 02.10.2007 ம் தேதியன்று அதிகாலை சுமார் 2.00 மணியளவில் **TN** 28 **L** 9856 என்ற பதிவெண் கொண்ட லாரியை கர்நாடகா மாநிலம், சித்ரதுர்கா மாவட்டம், மோளகல்மூர் வட்டம், பெல்லேரி - பெங்களூர் ரோடு, எஸ்.எச்.19 ரோடு, தமினாஹல்லி அருகில் ரோட்டின் இடதுபுற ஓரமாக சென்றுக்கொண்டிருந்தபோது எதிரே வந்த **AP** 27 **V** 7121 என்ற பதிவெண் கொண்ட லாரியின் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜராக்கிரதையாகவும் ஓட்டி வந்து மனுதாரர்களின் மகன் சென்ற லாரியின் மீது மோதியதில் சுரேஷ் என்பவருக்கு தலை, மூக்கு மற்றும் வலதுகால் முட்டியில் எலும்பு முறிவுகளும், உடலெங்கும் சிராய்ப்பு காயங்களும் ஏற்பட்டு, மேற்கண்ட சுரேஷ் உடனடியாக ராம்புரா அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றுக்கொண்டு, பின்னர் மேல் சிகிச்சைக்காக ஈரோடு **L.K.M.** மருத்துவமனையிலும், கோயமுத்தூர் கங்கா மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றார். இருந்தபோதிலும் மேற்கண்ட சுரேஷ் கடந்த 10.11.2007 ம் தேதியன்று இறந்துவிட்டார். மேற்கண்ட சுரேஷ் விபத்திற்கு முன்பு டிரைவராக வேலை செய்து மாதம் ரூ.10,000/- சம்பாதித்து வந்தார். இந்த விபத்தினால் ஏற்பட்ட இழப்பிற்கு ரூ.10,00,000/- இழப்பீடாக வழங்க வேண்டுமென்று மனுதாரர்களால் இம்மனுவில் கோரப்பட்டுள்ளது.

3) <u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்:</u>

இறந்து போன சுரேஷ் என்பவரின் வயது மற்றும் வருமானம் ஆகியவற்றை ஆவண பூர்வமாக மனுதாரர்களே மெய்பிக்க வேண்டுமென்றும், விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு சான்றிதழ், அனுமதி சான்று ஆகியவற்றை ஆவண பூர்வமாக மெய்பிக்க வேண்டுமென்றும், விபத்து ஏற்படுத்திய லாரியின் ஓட்டுநரான திருப்பதி ரெட்டி என்பவருக்கு விபத்தின்போது தகுதி வாய்ந்த ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் காப்பீட்டு விதிகளின் படி மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பீடும் இந்த எதிர்மனுதாரர் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்றும், மனுதாரர்களின் மகனான சுரேஷ் என்பவர் லாரியை மெதுவாக

இயக்கியிருந்தால் மேற்கண்ட விபத்தை தடுத்திருக்க முடியும் என்றும், இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், 2 ம் எதிர்மனுதாரரை பொறுத்து இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், இந்த மனுவில் கோரப்பட்டுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றும் ஆட்சேபிக்கப்பட்டுள்ளது.

4) <u>4 ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்:</u>

இறந்து போன சுரேஷ் என்பவரின் வயது மற்றும் வருமானம் ஆகியவற்றை ஆவண பூர்வமாக மனுதாரர்களே மெய்பிக்க வேண்டுமென்றும், விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு சான்றிதழ், அனுமதி சான்று ஆகியவற்றை ஆவண பூர்வமாக மெய்பிக்க வேண்டுமென்றும், **AP** 27 **V** 7121 என்ற பதிவெண் கொண்ட லாரியின் ஓட்டுநர் அதிவேகமாக ஓட்டி வந்ததே மேற்கண்ட விபத்திற்கு காரணம் என்றும், 1,2 எதிர்மனுதாரர்கள்தான் மனுதாரர்களுக்கு இழப்பீடு தொகை கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றும், 3 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் இந்த வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர்கள் என்றும், 1 ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் மீதுதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், விபத்து 02.10.2007 ம் தேதியன்று ஏற்பட்டது, ஆனால் முதல் தகவல் அறிக்கை 04.10.2007 ம் தேதியன்று பதிவு செய்யப்பட்டுள்ளதால் அதுகுறித்த ஆவணங்களை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும் என்றும், மேற்கண்ட சுரேஷ் 10.11.2007 ஆம் தேதியன்று இறந்துள்ளார் என்றும், விபத்தினால் அவர் இறக்கவில்லை என்றும், வீட்டில் உள்ள செப்டிக் டேங்கில் விழுந்து இறந்துவிட்டார் என்றும், இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், 4 ம் எதிர்மனுதாரரை பொறுத்து இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், இந்த மனுவில் கோரப்பட்டுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றும் ஆட்சேபிக்கப்பட்டுள்ளது.

5) <u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பு கூடுதல் எதிருரையின் சுருக்கம்:</u>

மனு பொய்யானது, சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. விபத்தினால் மேற்கண்ட சுரேஷ் இறக்கவில்லை என்றும், வீட்டில் உள்ள செப்டிக் டேங்கில் விழுந்து இறந்துவிட்டார் என்றும், மேற்கண்ட மரணம் இயற்கையான ஒன்று என்றும், இந்த எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் மனுதாரர்களுக்கு கொடுக்க தேவையில்லை என்றும், பிரேத பரிசோதனையும் செய்யப்படவில்லை என்றும், இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், 2 ம் எதிர்மனுதாரரை பொறுத்து இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் ஆட்சேபிக்கப்பட்டுள்ளது.

6) <u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில்,</u>

1) இந்த வழக்கு விபத்து யாருடைய அதிவேகத்தாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டது?
2) மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் யார் ?
3) மனுதாரர்கள் இழப்பீடு பெற உரிமையுள்ளவர்களா, அவ்வாறெனில் அவர்களுக்கு எவ்வளவு இழப்பீடு கிடைக்கத்தக்கது?

7) 2 ம் மனுதாரர் ஆறுமுகம் மனுவில் கூறப்பட்டுள்ள விபத்து குறித்த சங்கதிகளை நிரூபிக்க ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, ம.சா.1 ன் மூலமாக ம.சா.ஆ.1 முதல் 9 மற்றும் ம.சா.ஆ.12 மற்றும் 13 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. விபத்தை நேரில் கண்ணுற்ற சாட்சியான ஒரு முருகேசன் என்பவர் ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். ம.சா.2 ன் முலமாக ம.சா.ஆ.10 மற்றும் ம.சா.ஆ.11 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்கள் தரப்பில் 4 ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணிபுரியும் நிர்வாக அதிகாரி ஒரு வின்சென்ட் என்பவர் எ.ம.சா.1 ஆகவும், 2 ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் உதவி மேலாளராக பணிபுரியும் ஒரு பழனியப்பன் என்பவர் எ.ம.சா.2 ஆகவும், ஓமலூர் அரசு மருத்துவமனை Senior Assistant Surgeon எ.ம.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார். எ.ம.சா.1 ன் மூலமாக எ.ம.சா.ஆ.1 ஆவணமும், எ.ம.சா.2 ன் மூலமாக எ.ம.சா.ஆ.2 முதல் எ.ம.சா.ஆ.4 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்விபத்து வழக்கினை ராம்புரா காவல் நிலையத்தால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை எண்.62/2007 ம.சா.ஆ.1 ஆகும். 2,4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் பிரிவு 170 மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

8) <u>பிரச்சனை எண் 1 க்கு தீர்வு:</u>

இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய இப்பிரச்சனை குறித்து எழுந்துள்ள மெய்பிக்கும் சுமையை தீர்க்கும் பொருட்டு 2 ம் மனுதாரர் ஆறுமுகம் ம.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவர் தனது சாட்சியத்தில் தனது மகன் சுரேஷ், கடந்த 02.10.2007 ம் தேதியன்று அதிகாலை சுமார் 2.00 மணியளவில் TN 28 L 9856 என்ற பதிவெண் கொண்ட லாரியை கர்நாடகா மாநிலம், சித்ரதுர்கா மாவட்டம், மோளகல்மூர் வட்டம், பெல்லேரி - பெங்களூர் ரோடு, எஸ்.எச்.19 ரோடு, தமினாஹல்லி அருகில் ரோட்டின் இடதுபுற ஓரமாக சென்றுக்கொண்டிருந்தபோது எதிரே வந்த AP 27 V 7121 என்ற பதிவெண் கொண்ட லாரியின் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜராக்கிரதையாகவும் ஓட்டி வந்து தனது மகன் சென்ற லாரியின் மீது மோதியதில் தனது மகனுக்கு தலை, மூக்கு மற்றும் வலதுகால் முட்டியில் எலும்பு முறிவுகளும், உடலெங்கும் சிராய்ப்பு காயங்களும் ஏற்பட்டு, அவர் உடனடியாக ராம்புரா அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றுக்கொண்டு, பின்னர் மேல் சிகிச்சைக்காக ஈரோடு L.K.M. மருத்துவமனையிலும், கோயமுத்தூர் கங்கா மருத்துவமனையிலும் சிகிச்சை

பெற்றுள்ளதாகவும், அவ்வாறிருந்தும், தனது மகன் சுரேஷ் கடந்த 10.11.2007ம் தேதியன்று இறந்துவிட்டதாக சாட்சியம் அளித்துள்ளார்.மேற்படி வாய்மொழி சாட்சியத்தை மறுத்துரைக்கும் விதமாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் 4ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணிபுரியும் நிர்வாக அதிகாரி ஒரு வின்செண்ட் என்பவர் எ.ம.சா.1 ஆகவும், 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் உதவி மேலாளராக பணிபுரியும் ஒரு பழனியப்பன் என்பவர் எ.ம.சா.2 ஆகவும், ஓமலூர் அரசு மருத்துவமனை Senior Assistant Surgeon எ.ம.சா.3 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். விபத்தை நேரில் பார்த்த சாட்சிகள் எவரையும் 2ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் விசாரிக்கப்படவில்லை. ம.சா.1, ம.சா.2ன் வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை, ம.சா.ஆ.2 மோட்டார் வாகன ஆய்வறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் பார்க்கும் போது இந்த வழக்கில் விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் கவனக்குறைவு தான் காரணம் என்று இத்தீர்ப்பாயம் முடிவுக்கு வந்து இப்பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

9) <u>பிரச்சனை எண் 2க்கு தீர்வு:</u>

விபத்திற்கு காரணம் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரின் கவனக்குறைவு தான் என்று தீர்வு காணப்பட்டுள்ள நிலையில், இம்மனுதாரர்களுக்கு இழப்பீட்டு தொகை செலுத்த வேண்டிய பொறுப்பு எந்த எதிர்மனுதாரருக்கு உள்ளது என்பது குறித்த நாம் இங்கு பரிசீலிக்க வேண்டியுள்ளது. சம்பவத்திற்கு காரணமான AP 27 V7121 என்ற பதிவெண் கொண்ட வாகனம் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்பது ம.சா.ஆ.9 காப்பீட்டு ஆவணத்தின்மூலம் தெரிய வருகின்றது. மேற்படி வாகனம் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்திடம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும். மேற்படி வாகனத்திற்கான காப்பீடு 17.03.2007 முதல்16.03.2008 வரை அமலில் இருந்துள்ளதை அறிய முடிகிறது. விபத்து தேதியான 02.10.2007 அன்று விபத்திற்கு காரணமான வாகனத்திற்கு செல்லும்படியானதக்க காப்பீடு அமலில் இருந்து வந்துள்ளதும் தெரிய வருகிறது. இந்த வழக்கை பொறுத்தவரை காப்பீட்டு விதிமீறல் இல்லை என்பதால், 2ம் எதிர்மனுதாரர் தான் 1ம் எதிர்மனுதாரர் செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகையை செலுத்த வேண்டுமென்று இத்தீர்ப்பாயம் மேற்படி பிரச்சனைக்கு தீர்வு காண்கின்றது.

10) <u>பிரச்சனை எண் 3க்கு தீர்வு:</u>

மனுவின் 2ம் மனுதாரர் ஆறுமுகம், தனது மகன் சுரேஷ் இறந்ததை மெய்பிக்க ம.சா.1 ஆக விசாரித்துக்கொண்டதோடு இறந்துபோன சுரேஷின் இறப்பு சான்றிதழை ம.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்துள்ளார். மேற்படி வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியத்திலிருந்து மனுதாரர்களின் மகனான சுரேஷ் என்பவர் விபத்து ஏற்பட்டவுடன் உடனடியாக ராம்புரா அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றுக்கொண்டு, பின்னர் மேல் சிகிச்சைக்காக ஈரோடு L.K.M. மருத்துவமனையிலும், கோயமுத்தூர் கங்கா மருத்துவமனையிலும் சிகிச்சை

பெற்றுள்ளதாகவும், அவ்வாறிருந்தும், தனது மகன் சுரேஷ் கடந்த 10.11.2007 ம் தேதியன்று இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளதும் தெரிய வருகிறது.

11) இருப்பினும் இறந்துபோன சுரேஷ் விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் காரணமாக இறந்துபோகவில்லை என்றும், தண்ணீர் தொட்டிக்குள் விழுந்து மூச்சுத்திணறல் ஏற்பட்டதால் தான் இறந்துபோனார் என்று 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. இறந்துப்போன சுரேஷ் என்பவரின் உடல் பிரேத பரிசோதனை செய்யப்படவில்லை. ஆனால் அவர் விபத்து ஏற்பட்ட தினத்திலிருந்து சுமார் 40 நாட்களில் இறந்துள்ளார். விபத்தினால் அவருடைய வலது கால் மூட்டு எலும்பு முறிவுற்று சிகிச்சையின் போது வலதுகால் அறுவை சிகிச்சையின் மூலம் நீக்கப்பட்டுள்ளது ம.சா.ஆ.4 விடுவிப்பு குறிப்பின் மூலம் தெரியவருகின்றது. விபத்து தேதிக்கும், சுரேஷின் இறப்பு நிகழ்ந்த தேதிக்கும் இடைப்பட்ட கால இடைவெளியை கருத்தில் கொண்டு பார்க்கும் போதும், விபத்தினால் அவருக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மை மற்றும் அவரது வயது ஆகியவற்றை கருத்தில் கொண்டு பார்க்கும் போதும், சுரேஷின் வலதுகால் அகற்றப்பட்டுவிட்ட நிலையிலும், மரணமானது விபத்தினால் ஏற்பட்ட காயங்களின்றி, 2 ம் எதிர்மனுதாரர் முன்வைத்த காரணத்தினால் ஏற்பட்டிருக்க கூடுமென்று இத்தீர்ப்பாயத்தால் அனுமானிக்க இயலவில்லை. சுரேஷ் தண்ணீர் தொட்டிக்குள் விழுந்து இறந்துவிட்டதாக 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்வாதம் செய்யப்பட்டிருந்தாலும், அதனை மெய்ப்பிக்க போதுமான ஆதாரங்கள் எதுவும் இம்மனுவில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. தண்ணீர் தொட்டிக்குள் விழுந்துதான் இறந்தார் என்ற தகவல் 2 ம் எதிர்மனுதாரருக்கு யார் மூலம் எப்போது கிடைக்கப்பெற்றது என்பது குறித்தும் எதிருரையில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்பதும் இங்கு கவனிக்கத்தக்கதாகும். எ.ம.சா.3 ஆக விசாரிக்கப்பட்ட மருத்துவர் சீனிவாசன் தனது சாட்சியத்தில் சுரேஷின் மரணத்திற்கு விபத்து காயங்கள் காரணமில்லை என சாட்சியமளித்திருந்தாலும் அவர் சுரேஷிக்கு சிகிச்சை அளிக்கவில்லை என ஒப்புக்கொண்டுள்ளதால் அவரது சாட்சியத்தை இத்தீர்ப்பாயத்தால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. சுரேஷின் உடல் பிரேத பரிசோதனை செய்யப்படாத நிலையில், விபத்தினால் ஏற்பட்ட காயங்களின் தன்மையை கருத்தில் கொண்டு பார்க்கும் போது அவரது இறப்பிற்கு காரணம் விபத்தினால் ஏற்பட்ட காயங்களாக தான் இருக்க முடியும் என்று இத்தீர்ப்பாயம் அனுமானிக்கின்றது.

12) விபத்தில் இறந்து போன சுரேஷ் என்பவருக்கு இறக்கும் போது வயது 23 என ம.சா.ஆ.6 இறப்பு சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளதால், அவரின் வயது 23 என்றே இத்தீர்ப்பாயம் எடுத்துக்கொள்கிறது. அவர் விபத்து சமயத்தில் டிரைவராக வேலை செய்து மாதம் ரூ.10,000/- சம்பாதித்தாக மனுதாரர்கள் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், அவரது மாத சம்பளத்தை மெய்பிக்கும் விதமாக சாட்சியங்கள் முன்னிலைப்படுத்த மனுதாரர்கள் தவறியுள்ளார்கள். எனவே, இறந்து போன சுரேஷ் என்பவர்

தோராயமாக மாதம் ரூ.6,000/- சம்பாதித்து இருப்பார் என இத்தீர்ப்பாயம் கணக்கில் எடுத்துக் கொள்கிறது. எனவே, **<u>2017(2) டி,என். எம்ஏசி 609 ல் வெளியாகியுள்ள நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி /எதிரிடை/ பிரணாய் சேத்தி மற்றும் பிறர்</u>** என்ற வழக்கில் வழங்கப்பட்டுள்ள முன் தீர்ப்புப்படி இறந்துபோனவரின் வயது 23 என்ற நிலையில் பெருக்கல் குறியாக 18 ஐ எடுத்துக்கொள்ளவேண்டியுள்ளது. இறந்து போன சுரேஷ் என்பவருக்கு நிரந்தர வேலையில் இல்லாத காரணத்தினால் எதிர்கால வருமான இழப்பு (Future Prospects) 40 சதவீதம் என இத்தீர்ப்பாயம் நிர்ணயிக்கிறது.

13) மனுதாரர் சிகிச்சையின் போது மருத்துவ செலவினத்திற்கென ரூ.1,16,557/- செலவழித்து உள்ளதாக ம.சா.ஆ.5 மருத்துவ ரசீதுகளை தாக்கல் செய்துள்ளார். எனவே மனுதாரருக்கு மருத்துவ செலவினத்திற்கென ரூ.1,16,557/- கிடைக்கத்தக்கது என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

| | | |
|---|---|---|
| 1 | சார்ந்திருத்தலால் ஏற்பட்டுள்ள இழப்பு<br>(40 சதவிகித எதிர்காலவருமானம்) | ரூ.6,000/-+ ரூ.2,400/- |
| 2 | ரூ. 8,400/- X 18 X 12 | ரூ. 18,14,400/- |
| 3 | சொந்த செலவீனங்களுக்காக 1/2 கழிக்க (ரூ.18,14,400/- (-)ரூ. 9,07,200/-) | ரூ. 9,07,200/- |
| 4 | அன்பு மற்றும் பாச இழப்பு<br>(1 மற்றும் 2 ம் மனுதாரர்களுக்கு தலா ரூ.16,500 வீதம்) | ரூ. 33,000/- |
| 5 | இறுதி சடங்கு செலவு | ரூ.20,000/- |
| 6 | மருத்துவ செலவு | ரூ.1,16,557/- |
| | ஆக, மொத்தம் | ரூ.10,76,757/- |

14) ஆகவே, மனுதாரர்களுக்கு மேற்கண்டவாறு ரூ.10,76,757/- ஐ இழப்பீடாக பெற உரிமையுடையவர்கள் என்று இத்தீர்ப்பாயம் கருதுகின்றது. இம்மனுவில் மனுதாரர்கள் ரூ. 10,00,000/- மட்டுமே இழப்பீடாக கோரியிருந்தாலும், மாண்புமிகு உச்சநீதி மன்றம் Nagappa Vs Gurudayal Singh and Others (2003) 2 SCC – 274 மற்றும் Meenadevi Vs Nunu Chand Mahto (2023) 1 SCC 204 உட்பட பல்வேறு வழக்குகளில் பிறப்பித்த தீர்ப்புகளின் அடிப்படையில் இம்மனுதாரர்களுக்கும் மனுவில் கோரியுள்ளதை விட கூடுதலான இழப்பீடு வழங்கலாம் என இத்தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

15) இறுதியாக,

1. இம்மனு அனுமதிக்கப்பட்டும், 3,4 எதிர்மனுதாரர்களை பொறுத்து இம்மனுவை தள்ளுபடி செய்தும்,

2. **ரூ. 10,76,757/-(ரூபாய் பத்து இலட்சத்து எழுபத்து ஆறாயிரத்து எழுநூற்று ஐம்பத்து ஏழு மட்டும்**) ஐ மோட்டார் வாகன விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடாக 2 ம் எதிர்மனுதாரர் வழக்கு செலவுத்தொகையுடன் வழங்க வேண்டுமென்றும்,

3. மனு தள்ளுபடி செய்யப்பட்ட காலங்களுக்கு மனுதாரருக்கு வட்டி கிடைக்கத்தக்கதல்ல என்றும்,

4. இந்த இழப்பீட்டு தொகைக்கு வழக்கு தாக்கல் நாள் முதல் 7.5% வட்டி செலுத்த வேண்டுமென்றும், எதிர்மனுதாரர் இந்த இழப்பீட்டு தொகையை இரண்டு மாதங்களுக்குள் சங்ககிரி சார்பு நீதிமன்றம், கணக்கு எண் : 42830274259, IFSC எண் SBIN0000994 என்ற வங்கி கணக்கில் NEFT/RTGS முறையில் நேரடி வங்கி மாற்றம் மூலம் செலுத்த வேண்டுமென்றும்,

5. மொத்த இழப்பீட்டுத் தொகையில் 1 ம் மனுதாரருக்கு ரூ.5,38,379/- வும், 2 ம் மனுதாரருக்கு ரூ.5,38,378/- ம் கிடைக்கத்தக்கது என்றும், 2 ம் எதிர்மனுதாரர் வைப்பீடு செய்தவுடன், அவரவர் பாக இழப்பீட்டு தொகை முழுவதையும் வட்டியுடன் மனுதாரர்கள் உடனடியாக பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கியும்,

6. வழக்கறிஞர் கட்டணமாக ரூ.17,768/- நிர்ணயிக்கப்பட்டும்,

7. இம்மனுதாரர் வழக்கு தாக்கல் செய்யும் போது நீதிமன்ற கட்டணமாக ரூ.10/-ஐ மட்டும் செலுத்தியிருக்கிறார். மீதமுள்ள நீதிமன்ற கட்டணத்தை செலுத்த இடைமனு எண் 2779/2008 தாக்கல் செய்து உத்தரவு நாள் 16.10.2008 ன் படி விலக்கு பெற்றிருப்பதால், மீதமுள்ள நீதிமன்ற கட்டணமான ரூ.10130/-ஐ மனுதாரர்கள் 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும்,

8. மாண்புமிகு சென்னை,உயர்நீதிமன்ற உத்தரவு எண். C.R.P No. 1343 of 2012 நாள்:02.04.2016 MD TSTC Salem Ltd., /Vs/ Chinnadurai என்ற இந்த வழக்கில் சொல்லப்பட்ட உத்தரவின் படி 2 ம் எதிர்மனுதாரர் TDS க்காக எந்த தொகையும் பிடித்தம் செய்யக்கூடாது என்றும் உத்திரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிபொறியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 6 ம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

PANNEERSELVAM N

Norms of February 2026
Digitally signed by PANNEERSELVAM N
Date: 2026.03.06 18:36:05 +0530

இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயர்,
(சார்பு நீதிபதி, சங்ககிரி)

<u>மற்ற விபரங்கள்</u>

| | |
|---|---|
| மனு தாக்கலான தேதி | 13.10.2008 |
| உத்தரவு நாள் | 06.03.2026 |
| இழப்பீட்டுத்தொகை | ரூ.10,76,757/-(ரூபாய் பத்து இலட்சத்து எழுபத்து ஆறாயிரத்து எழுநூற்று ஐம்பத்து ஏழு மட்டும்) |
| வட்டி விகிதம் மற்றும் செலுத்தப்பட வேண்டிய காலம் | மனு தேதியான 13.10.2008 லிருந்து தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை (தவறுகையினால் மனு தள்ளுபடி ஆகியிருந்த காலங்கள் தவிர்த்து) ஆண்டு ஒன்றுக்கு 7.5% வட்டி மற்றும் இம்மனுவின் செலவுத் தொகையும் சேர்த்து இன்றிலிருந்து 60 நாட்களுக்குள் அவரவர் வங்கிக்கணக்கில் வைப்பீடு செய்ய வேண்டும். |
| மொத்த நீதிமன்ற கட்டணம் | ரூ. 10,140/- |
| செலுத்திய நீதிமன்ற கட்டணம் | ரூ. 10/- |
| மனுதாரர்கள் செலுத்த வேண்டிய நீதிமன்ற கட்டணம் | ரூ. 10,130/- |
| நீதிமன்ற கட்டணம் செலுத்துவதற்கான காலம் | மனுதாரர்கள் இம்மனுவிற்காக செலுத்த வேண்டிய பாக்கி நீதிமன்ற கட்டணமான ரூ.10,130/-ஐ உத்தரவு தேதியான 06.03.2026 லிருந்து 15 நாட்கள் காலகெடுவிற்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும். |
| அனுமதிக்கப்பட்ட செலவுத்தொகை | ரூ. 28,212/- |
| மனு தள்ளுபடியான காலம் ஏதேனும் உண்டா | - |

<u>செலவுத்தொகைப் பட்டியல்</u>

| மனுதாரர்கள் தரப்பு செலவுத் தொகை பட்டியல் | தொகை | |
|---|---|---|
| | ரூ. | பை. |
| நீதிமன்ற கட்டணம் | 10,140 | 00 |
| வக்காலத்து கட்டணம் | 10 | 00 |
| சான்றாவண கட்டணம் | 25 | 00 |
| வழக்கறிஞர் கட்டணம் | 17,768 | 00 |
| கட்டளை சார்வு கட்டணம் | 69 | 00 |
| எழுத்துக்கூலி | 200 | 00 |
| மொத்தம் | 28,212 | 00 |

(இம்மனுவின் செலவுத்தொகையான ரூ.28,212/ஐ 2ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு செலுத்த உத்தரவிடப்படுகிறது.)

PANNEERSELVAM N

Norms of February 2026
Digitally signed by PANNEERSELVAM N
Date: 2026.03.06 18:36:20 +0530

இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயர்,
(சார்பு நீதிபதி, சங்ககிரி)

இணைப்பு:-

(1) மனுதாரர்கள் தரப்பு சாட்சிப்பட்டியல்-

ம.சா.1 .. திரு. ஆறுமுகம் (2ம் மனுதாரர்)

ம.சா.2 .. திரு. முருகேசன்

(2) எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிப்பட்டியல் -

எ.ம.சா.1 .. திரு. வின்சென்ட், (4ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் நிர்வாக அதிகாரி)

எ.ம.சா.2 .. திரு. பழனியப்பன், (2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் உதவி மேலாளர்)

எ.ம.சா.3 .. திரு. சீனிவாசன், Senior Assistant Surgeon

(3) மனுதாரர்கள் தரப்பு சான்றாவணப்பட்டியல் -

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 .. | முதல் தகவல் அறிக்கை | - சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 .. | AP 27 V 7121 மற்றும் TN 28 L 9856 என்ற பதிவெண் கொண்ட இரண்டு வாகனங்களின் மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் | - சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.3 .. | காயச் சான்றிதழ் | - சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.4 .. | கோவை கங்கா மருத்துவமனையில் 06.10.2007 முதல் 25.10.2007 வரை சிகிச்சை பெற்றதற்கான மருத்துவமனை விடுவிப்பு குறிப்பு | - சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.5 .. | மருத்துவ பில்கள் | - அசல் |
| ம.சா.ஆ.6 .. | இறப்பு சான்றிதழ் | - அசல் |
| ம.சா.ஆ.7 .. | வாரிசு சான்றிதழ் | - அசல் |
| ம.சா.ஆ.8 .. | இறந்துபோன சுரேஷின் ஓட்டுநர் உரிமம் | - நகல் |
| ம.சா.ஆ.9 .. | AP 27 V 7121 மற்றும் TN 28 L 9856 என்ற பதிவெண் கொண்ட இரண்டு வாகனங்களின் காப்பீட்டு பாலிசி | - நகல்கள் |
| ம.சா.ஆ.10 .. | முருகேசன் என்பவரின் குடும்ப அட்டை | - நகல் |
| ம.சா.ஆ.11.. | முருகேசன் என்பவரின் ஆதார் அடையாள அட்டை | - நகல் |
| ம.சா.ஆ.12 .. | 10.11.2007ம் தேதியன்று திருச்செங்கோடு ஊரக காவல் ஆய்வாளருக்கு அனுப்பிய டெலிகிராமம் மற்றும் ரசீது | - அசல் |
| ம.சா.ஆ.13 .. | 10.11.2007ம் தேதியன்று இராமாபுர காவல் ஆய்வாளருக்கு அனுப்பிய டெலிகிராமம் மற்றும் ரசீது | - அசல் |

(4) எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணப்பட்டியல்

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1.. | TN 28 N 9856 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் காப்பீட்டு ஆவணம் | - நகல் |
| எ.ம.சா.ஆ.2.. | திருப்பதி ரெட்டி என்பவரின் ஓட்டுநர் உரிமம் | - புகைப்பட நகல் |

எ.ம.சா.ஆ.3.. AP 27 V 7121 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் - புகைப்பட நகல் பதிவு சான்று

எ.ம.சா.ஆ.4.. AP 27 V 7121 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் - நகல் காப்பீட்டு ஆவணம்

PANNEERSELVAM N

Norms of February 2026
Digitally signed by PANNEERSELVAM N
Date: 2026.03.06 18:36:36 +0530

இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயர்,
(சார்பு நீதிபதி, சங்ககிரி)

குறிப்பு:-

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 11.05.2020 ம் தேதி Tr.C.M.P. Nos. 264 to 281 of 2020 M/s Cholamandalam MS General Insurance Company Limited //Vs// Mr.Ayyannar.S and Other என்ற வழக்கில் வழங்கிய உத்தரவுக்கிணங்க தனியாக தீர்ப்பாணை தயாரிக்கப்படவில்லை. அதில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் இந்த உத்தரவில் இணைக்கப்பட்டுள்ளன.